பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 18 புதன்கிழமை 03.08.2022 கதிர் 160

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு இம்மாதத்துக்குள் வெளியீடு

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

2021 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும் காலம் தொடர்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அதன்படி குறித்த பரீட்சை பெறுபேறுகள், எதிர்வரும் 15 முதல் 30 ஆம் ☞2

# தமிழருக்குத் தீர்வு கட்டாயம்



## கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

**போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வை வழங்க வேண்டியது கட்டாயமாகும்.**

**- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

**அத்துடன், நாட்டை மீளக் கட்டியெழுப்ப வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் உதவிகளைப் பெறுவதற்கு எதிர்பார்க்கின்றோம் என்றும் ஜனாதிபதி கூறினார்.**

**9 ஆவது நாடாளுமன்றத்தின் 3 ஆவது கூட்டத் தொடரை இன்று ஆரம்பித்துவைத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொள்கை விளக்க உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.** ☞2

## இலங்கைக்கு இந்தியா உயிர் மூச்சு மோடிக்கு நன்றி தெரிவித்த ரணில்



நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து இலங்கை மீண்டெழுவதற்கான முயற்சிக்கு இந்தியா உதவியது. இந்தியப் பிரதமர் தலைமையிலான அந்நாட்டு அரசு எமக்கு வழங்கிய உதவி, வாழ்வதற்கான உயிர் மூச்சு ஆகும்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கைக்கு உதவி வழங்கிய மைக்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், அவர் தலைமையிலான அரசுக்கும், அந்நாட்டு மக்களுக்கும் இலங்கை மக்களின் சார்பில் நன்றிகளைத் ☞2

## சர்வகட்சி அரசில் சகலரும் இணைக

### ரணில் பகிரங்க அழைப்பு

இருளுக்குச் சாபமிடுவதைவிட, ஒரு விளக்கையாவது ஏற்றுவது, நாட்டுக்காக நான் ஆற்றும் கடமை என நினைத்தேன். அதனால்தான் சவாலை ஏற்றேன். நாட்டை மீட்டெடுக்க ஒன்றிணைவோம். எனவே, சர்வகட்சி அரசில் இணையுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றேன். ☞2

## சொல்லுக்குச் செயல் வடிவம் கொடுக்க வேண்டும் ரணில்!

### கொள்கை விளக்க உரையைப் பாராட்டி சஜித் கருத்து



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரையில் உள்ள உள்ளடக்கங்கள் சாதகமானவை. எனவே, சொல்லுக்கு ஜனாதிபதி செயல் வடிவம் கொடுக்க வேண்டும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து ☞2

## அழைப்பை ஏற்று சஜித் அணி கடிதம்


பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான சர்வகட்சி அரசை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அனுப்பிய கடிதத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி பதிலளித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அதில், நாட்டில் நிலவிவரும் ☞2

## ரணிலின் சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்கவேமாட்டோம்!

### ஜே.வி.பி. அறிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சர்வகட்சி அரசில் அங்கம் வகிக்கமாட்டோம் என்று ஜே.வி.பி. அறிவித்துள்ளது. ☞2

## போராட்டக்காரர்களை பாதுகாத்தே தீருவேன்

### வன்முறையாளர்கள் ஒருபோதும் தப்ப முடியாது என்கிறார் ரணில்

அமைதி வழிப் போராட்டக்காரர்களை நான் பாதுகாப்பேன். ஆனால், வன்முறையில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து ஒருபோதும் தப்ப முடியாது.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ☞2

## தமிழர்களின் கோரிக்கைகளுக்கும் சர்வகட்சி ஆட்சியில் தீர்வு வேண்டும்

### ரணிலின் அழைப்புக்கு டக்ளஸ் பதில்



(ஆர்.கலையமுதன்)

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உட்பட காணிப் பிணக்குகள் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பிரதான பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் சர்வகட்சி அரசொன்றிற்கான பொது வேலைத் திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி ☞2

## மஹிந்தவின் சேவை நாட்டுக்கு அவசியமாம்

### அமரவீர கூறுகின்றார்



நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்துக்குச் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அனுபவங்கள் அவசியமாகும் என்று விவசாய ☞2

## ஜனாதிபதியின் உரை; 9, 10, 12 இல் விவாதம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் இன்று ஆற்றிய கொள்கை விளக்க உரை மீதான விவாதம் எதிர்வரும் 09, 10, 12ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## சீனாவின் உளவுக் கப்பலை இலங்கைக்குள் விடாதீர்கள்

### ரணில் அரசிடம் இப்படி கோருகின்றார் செல்வம்

சீனாவின் உளவு பார்க்கும் கப்பல் இலங்கை நோக்கிவருவதை இலங்கை அரசும் ஜனாதிபதியும் உடனடியாக நிறுத்தவேண்டும். எங்களைப்பொறுத்தமட்டில் இந்தியாவுக்குப் பாதுகாப்புப் பிரச்சினை வருமாக இருந்தால் அதனை அனுமதிக்க முடியாது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். ☞2



## ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து படம் எடுத்த இளைஞர் சிக்கினார்

கொழும்பில் ஜூலை மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் போது ஜனாதிபதி மாளிகைக்குள் சென்று ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து படம் எடுத்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ☞2

## போராட்டக்காரர்களை ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் இன்று கொள்கை விளக்க உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைதி வழிப் போராட்டக்காரர்களை நான் வேட்டையாடுவதாக விமர்சிக்கின்றனர். அமைதி வழிப் போராட்டக்காரர்களை நான் வேட்டையாடவில்லை. அவர்களைப் பாதுகாப்பேன். சட்டத்தைக் கையில் எடுத்து, வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

## மஹிந்தவின் சேவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித் தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு செயற்பட்டு வருகின்றார். அவர் சகல கட்சிகளிலுள்ள சிரேஷ்ட மற்றும் அனுபவம் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளிலுமுள்ள அனுபவம் படைத்தவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு நாட்டை முன்னேற்றும் வேலைத்திட்டத்துக்கு பங்களிப்பு செய்வது முக்கியமாகும்.

நாட்டின் தற்போதைய தேவை ஆட்சியைக் கவிழ்த்து நாட்டை சீரழித்து அதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதல்ல. சர்வகட்சி அரசில இணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தைப் பலப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் – என்றார்.

## ஜனாதிபதி ஆசனத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரணியகல பகுதியில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர், சமன்புரகம பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவராவார்.

## சீனாவின் உளவுக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

இலங்கை பொருளாதார ரீதியாக நலிவடைந்து மக்களுடைய அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் ஓர் இராஜதந்திர நடவடிக்கையாக இலங்கை அரசு செயற்படவில்லை.

வடக்கு – கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் இந்தியா பெரும் பங்கு வகிக்கின்றது.

இந்திய மீனவர்களின் வருகை என்பது கவலையான விடயமாக இருந்தாலும் தமிழ் பேசும் சமூகமாகிய நாங்கள் இந்தியாவை ஒருபோதும் கைவிட முடியாது. அண்மையில் சீனாவினுடைய தூதுவர் வடக்கு வந்து ஒரு சர்ச்சையைக் கிளப்பிச் சென்ற பின்னணியில் பல எதிர்ப்புகளை எமது மக்கள் காட்டியிருந்தார்கள்.

ஆகவே, இலங்கை அரசு இராஜாதந்திர நடவடிக்கையாக இரண்டு நாடுகளையும் சாதகமாக வைத்திருக்க வேண்டும் என்றால் இந்தியாவைப் பகைக்கக்கூடாது என்பது எமது கருத்தாகும்.

பொருளாதார ரீதியில் விழுந்து கிடக்கின்ற இலங்கைக்குப் பல உதவிகளை இந்தியா அண்மைக்காலமாக செய்து வருகின்றது.

எமது தமிழர்களைப் பொருத்தமட்டில் இந்தியாதான் எமக்கான தீர்வைப் பெற்றுத்தரக் கூடிய நாடாகவும், எங்களுக்குக் குரல் கொடுக்கக்கூடிய வல்லமை பொருந்தியதாக நாடாகவும் இருக்கின்றது.

இந்தநிலையில், சீனாவின் வேவு பார்க்கும் கப்பல் வருகையை இலங்கை அரசு உடனடியாக நிறுத்தவேண்டும். இல்லையெனில் இந்தியா இலங்கையை விட்டு அதிக தூரம் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

இந்தியாவைப் பகைப்பதால் இலங்கைக்கு ஒருபோதும் நன்மை கிடைக்காது. அதைத் தமிழர்களாகிய நாங்கள் ஏற்றுக் கொள்ளவும் முடியாது – என்றார்.

## தமிழர்களின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வகட்சி அரசொன்றை அமைப்பதற்கான பொது வேலைத்திட்டத்திற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பங்களிப்பை கோரிக்கையாக விடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பியுள்ள கடிதத்திற்குப் பதிலளித்து, தமிழ் மக்களின் சார்பில் பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து எழுதிய பதில் கடிதத்திலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இயல்பு நிலையை மீட்டெடுப்பதற்கும், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்க்கவுமான சவாலான பணியை முன்னெடுக்க அனைத்து அரசியல் கட்சிகள், நிபுணர்கள், சிவில் சமூகங்கள் போன்றவற்றின் பங்கேற்புடன் ஒரு பொது வேலைத்திட்டத்தை செயல்படுத்தும் தங்களின் கடுமையான முயற்சியை பாராட்டுகின்றேன். எனது கட்சியான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம், 19ஆவது திருத்தம் மற்றும் நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவை மீள அறிமுகப்படுத்துவதற்கும் மேலதிகமாக ஒரு பரந்த உரையாடலுக்காக முயற்சிப்பதையிட்டு எமது பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் பின்வரும் 10 அம்சக் கோரிக்கைகளையும் உங்கள் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளுமாறு முன்மொழிகின்றேன் என்றும் அந்தக் கடிதத்தில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் ஜனாதிபதியிடம் முன்மொழியப்பட்டுள்ள பத்து அம்சக் கோரிக்கைகளும் வருமாறு:–

1. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்டம் இயற்றுதல்.

2. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் அரசமைப்பு விதிகளை முழுமையாக அமுல்படுத்துவதை மேற்பார்வையிடும் ஒரு குழுவை அமைப்பது. அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதை உறுதிசெய்வதற்குத் தேவையான நிர்வாக மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகளை இந்தக் குழு பரிந்துரைக்க வேண்டும்.

3. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது குற்றம் சாட்டப்பட்டு நீண்ட காலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல்.

4. வடக்கு மற்றும் கிழக்கில் பாதுகாப்பு படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகளை விடுவித்தல்.

5. வனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்புகள், சாகுபடி செய்யக்கூடிய, மீன்வளர்ப்பு விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய மற்றும் மேய்ச்சலுக்குப் பயன்படுத்தப்படும் நிலங்களை வன காப்பகங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக நாடளாவிய ரீதியில் பல புகார்கள் உள்ளன. இது வடக்கில் பயிர்ச்செய்கையையும், நன்னீர் மீன்வளர்ப்பையும் தடுத்து சிரமத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, இவ்விவகாரங்கள் தொடர்பாக 2012 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வர்த்தமானிகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

6. தொல்லியல் திணைக்களம், தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி, தொல்பொருள் நினைவுச் சின்னங்களாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்புகள் எதுவும் வெளியிடப்படாமல், வடக்கு மற்றும் கிழக்கில் தொல்லியல் பெறுமதி மிக்க இடங்களாக ஒதுக்கியுள்ளதாக பல முறைப்பாடுகள் உள்ளன. தொல்பொருள் இடங்களாக முறையாக அறிவிக்கப்படாத போதிலும், அந்த இடங்களுக்குள் மக்கள் நுழைவதை திணைக்களம் தடுக்கின்றது. தொல்லியல் மற்றும் தொல்பொருள் இடங்களின் நினைவுச்சின்னங்களை அடையாளம் காணும் திணைக்கள அதிகாரிகளின் எந்தவொரு முயற்சியிலும் வடக்கு மற்றும் கிழக்கில் தொல்பொருள் மதிப்புமிக்க இடங்களாக வர்த்தமானியில் வெளியிடுவதற்கு முன்னர், அப்பகுதி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதிகாரிகள் இடம்பெறுவதுடன், குறிப்பாக தொடர்புடைய இனக்குழுக்களின் ஆலோசனையையும் பெற வேண்டும்.

7. பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸ் சேவை ஆகியவற்றில் நாட்டின் இன விகிதாசாரத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதை உறுதி செய்வதற்கான திட்டத்தை உருவாக்குதல்.

8. அரச விழாக்களில் இரு மொழிகளிலும் (சிங்களம் மற்றும் தமிழ்) தேசிய கீதத்தைப் பாடுதல்.

9. தனிநபர்கள், புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் முஸ்லிம் அமைப்புகள் மீதான தடையை நீக்குதல்.

10. 18 வயதை அடைந்த பின்னர் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாட்டில் வசிப்பவர்கள் மற்றும் வேலைக்காக வெளிநாட்டில் இருப்பவர்கள் பொதுத் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கும் வகையில் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருதல்.

போன்ற கோரிக்கைகளை முன்மொழிந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதானது உங்களது பொது வேலைத்திட்ட முயற்சிக்கு மேலும் வலுச் சேர்ப்பதாகவும் அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## சொல்லுக்குச் செயல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சர்வகட்சி வேலைத்திட்டத்தைத் தான் ஆதரிக்கிறேன் எனவும் இதன்போது அவர் குறிப்பிட்டார்.

## அழைப்பை ஏற்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடியை நிவர்த்திசெய்து மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்கத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டியுள்ளது.

இதனைக் கருத்தில்கொண்டு, அவற்றுக்குத் தீர்வுகாணும் முகமாக 19 ஆவது அரசமைப்பு திருத்தம் மற்றும் நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு முறைமையை மீண்டும் அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட அடுத்த கட்டம் குறித்த கலந்துரையாடலுக்காக விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்பதாக ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் கூட்டணியால் ஏற்றுக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரணிலின் சர்வகட்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

மேலும், சர்வகட்சி அரசுக்குத் தமது கட்சி ஆதரவளிக்காது எனவும் அவர் கூறினார்.

உத்தேச சர்வகட்சி அரசுக்குக் குறிப்பிட்ட காலவரையறை இல்லாத காரணத்தில் தாம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சர்வகட்சி அரசில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று தெரிவித்தார்.

9 ஆவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையை நிகழ்த்தும் போதே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எரிவாயு விநியோகிக்கப்படுகின்றது. பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. என்றுமில்லாத வகையிலான பொருளாதார நெருக்கடியையே நாம் எதிர்கொண்டுள்ளோம். எனவே, இவ்வருடம் இறுதி வரை நெருக்கடி நிலை தொடரும்.

இடைக்கால வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்படும். அதில் பல திட்டங்கள் முன்வைக்கப்படும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் தொடரும். அதனை வெற்றிகரமாக நிறைவுசெய்ய எதிர்பார்க்கின்றோம். உலகில் எல்லா நாடுகளும் இலங்கையின் நட்பு நாடுகள்தான். எமக்கு எதிரிகள் கிடையாது. எந்தவொரு அணியையும் நாம் சார்ந்து இருக்கவில்லை. எல்லா நாடுகளுடனும் நல்லுறவைப் பேணும் வகையிலான வெளிவிவகாரக் கொள்கை முன்னெடுக்கப்படும் – என்றார்.

## இலங்கைக்கு இந்தியா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றார்.

நாடாளுமன்றத்தில் இன்று கொள்கை விளக்க உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## கொள்கை விளக்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது அத்தியாவசியமானது. போரால் பாதிக்கப்பட்ட அவர்கள் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றால்

பாதிக்கப்பட்டுள்ளனர். தீர்க்க வேண்டிய காணிப் பிரச்சினைகள் பல உள்ளன.

வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நாம் புதிதாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. வெளிநாடுகளில்

வாழுகின்ற இலங்கை தமிழ் மக்களுடன் நெருங்கிச் செயற்பட்டு, இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு அவர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றோம் – என்றார்.

அதேவேளை, மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

## உயர்தரப் பரீட்சை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதிகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்–
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நம்பிக்கை தராத உரை

**அடுத்த இரண்டரை ஆண்டுகளுக்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஏற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கை விளக்கத்தை வெளியிட்டு விட்டார்.**

**வெளியில் இனிப்பு பூசப்பட்ட வெறும் கசப்பு மருந்துதான் அது என்பது துலாம்பரமானது.**

**இப்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு சர்வகட்சி அரசு மூலம் தீர்வு காணும் எத்தனம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தல் போன்றவை தொடர்பில் அவரது தெளிவான நிலைப்பாடுகள் வரவேற்கத்தக்கவை. அவை தொடர்பில் வெளிப்படையாகவும். புரிதலுக்கு உகந்த முறையிலும் அவர் பேசியிருக்கின்றார். அந்தப் பரிந்துரைகளைப் பின்பற்றுவதை தவிர நாட்டுக்கு வேறு வழியில்லை என்பது தான் யதார்த்தம். ஆக, காரிய சாத்தியமான – யதார்த்தமான – வழிமுறைகளைப் பிரேரித்த அவரின் திட்டம் பாராட்டப்பட வேண்டியது; வரவேற்கத்தக்கது.**

**முன்னைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போன்று நான் பௌத்த, சிங்கள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்று பேரினவாதப் போக்கை அப்பட்டமாக வெளிப்படுத்தாமைக்காக ரணிலை மெச்சலாம். 'அனைத்து இலங்கையரினதும் ஜனாதிபதியாகவே தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறேன்' என்று அவரின் உள்ளார்ந்த கூற்று நல்ல சமிக்ஞை.**

**ஆனால், நாட்டின் இன்றைய இக்கட்டு நிலைக்கு அடிப்படை – பிரதான – காரணமாக அமைந்த தேசிய இனப்பிரச்சினை தொடர்பிலும், அதற்கான தீர்வு தொடர்பிலும் வெளிப்படையாகவும் நிதர்சனமாகவும் பேசாமல், தட்டிக் கழித்துப் பூடகமாக கருத்துரைத்துச் சென்றுள்ள அவரது உரை அவரது கிழட்டு நரி அரசியல் தந்திரத்திற்கு மற்றொரு சான்று.**

**"இங்கு பல வருடகாலமாக தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டியமை அத்தியாவசியமான காரணி ஒன்றாகும். யுத்தத்தின் மூலம் பாதிக்கப்பட்ட அவர்கள் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். தீர்க்க வேண்டிய காணிப் பிரச்சினைகள் பல உள்ளன. வடக்கில் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நாம் புதிதாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கைத் தமிழ் மக்களுடன் நெருங்கிச் செயல்பட்டு இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு அவர்களது ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்." – என்று அவர் கூறியிருக்கிறார்.**

**மற்றைய பிரச்சினைகள் குறித்து எல்லாம் விவரித்து, விரிவாகப் பேசிய ரணில் தமிழரின் இந்த பிரச்சினைகள் குறித்து மட்டும் தந்திரமாக ஓரிரு சொல்லாடல்களில் சமாளித்துச் செல்கின்றார். இலங்கையர் என்று அடையாளத்தை மட்டும் கொண்ட சமூகம் ஒன்றை உருவாக்குவது குறித்து அதிகம் பிரபலாபித்த ரணில், அதன்மூலம் இலங்கைத் தீவில் தமிழர்களின் தனித்துவத்தை அங்கீகரிக்கும் தனது நிலைப்பாடு யாது என்பதை சொல்லாமல் சொல்லி இருக்கின்றார். தமிழர் விடயத்தில் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுத்தல் என்ற வாசகத்தோடு அவரது உரை மடங்கி விட்டது. அதற்கு மேல் பொருளாதார, காணிப் பிரச்சினைகள் பற்றி மட்டுமே அவர் குறிப்பிடுகின்றார்.**

**தமிழர்களின் அரசியல் பிரச்சினையின் அடிப்படைகள் குறித்துக் கூட தமது உரையில் குறிப்பிட திராணியத்த ஜனாதிபதி ரணில், அரசியல் தீர்வை நோக்கி காலடி எடுத்து வைப்பார் என்று நம்புவது பகல் கனவுதான்.**

# நல்லூர் பெருந்திருவிழாவுக்கு பண்பாட்டு உடையுடன் வருக!

## கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை



நல்லூர் கந்தன் ஆலயப் பெருந்திருவிழா நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகியது. எமது புனிதத்தைப் பேணுகின்ற நல்லூர் கந்தன் பெருந்திருவிழாவில் பொழுது போக்குக் கழிப்பிடமாக ஆலயச் சூழலைக் கருதாது, பக்திபூர்வமாக ஆலயத்துக்கு அனைத்துப் பக்தர்களும் பண்பாட்டு உடையணிந்து முருகப்பெருமானின் திருவருட்கடாட்சத்தைப் பெற்றுய்யவேண்டும்.

–இவ்வாறு கோரிக்கை முன்வைத்துள்ளார் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவரும் சிவபூமி அறக்கட்டளை, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகியவற்றின் தலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு–

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தப் பெருமானின் பெருந்திருவிழா – நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகி 29.08.2022 வரை மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது. சைவ மக்களின் தலையாய திருக்கோவில் நல்லூர், நல்லூர் திருவிழாக் காலம் சைவத் தமிழர்களின் வாழ்வில் மகோன்னத காலம் பக்தி, பண்பாடு பாரம்பரியங்களை வளர்த்துக் கொள்வதற்குரிய காலம். எமது தலைமுறை சீரான வழியில் வாழ்வதற்கு வழிகாட்டும். வாழ்வியல் விழா நல்லூர் கந்தன் திருவிழா. எனவே சகல மக்களும் இப்புண்ணிய காலத்தை புனிதமாகப் பேணுங்கள். குடும்பம் குடும்பமாக ஆலய தரிசனம் செய்யுங்கள். மாலையில் நடைபெறும் மகிழ்ச்சியான திருவிழாப் பொலிவை அனைவரும் கண்டு மகிழுங்கள். நேரத்தை ஒதுக்கி நல்லூர் பொழுதைப் பயன்படுத்துவதால் மனதில் அமைதியும் ஆனந்தமும் உருவாகும். எவ்வளவோ நேரத்தை வாழ்வில் அவப்பொழுதாக கழிப்பவர்கள் நாங்கள். நல்லூர் பொழுது எல்லோர்க்கும் தவப்பொழுது.

பண்பாட்டு உடைகளோடு ஆலயத்துக்கு வாருங்கள். வழிபாட்டுக்குரிய உடைக்கு மாறாக வருபவர்களால் ஏற்படும் இடையூறு வெறுக்கத்தக்கது. சுற்றுலாவுக்கு வரும் காலமல்ல. மனதைச் சுத்தப்படுத்தி மாசிலா வாழ்வு கேட்கும் காலம். ஆலய சுற்றாடலில் வாணிபம் செய்யும் அன்பர்கள் அனைவரும் பண்பாட்டைப் பேணுங்கள்.

சினிமாப் பாடல்கள் மற்றும் பண்பாட்டுக்கு இடையூறான சந்தர்ப்பங்களைத் தவிருங்கள். இரண்டு ஆண்டுகள் பெருவிழாக் காலத்தை நாம் உலகத்தில் ஏற்பட்ட கொடிய நோயால் இழந்துவிட்டோம். எனவே, இம்முறையும் நோய்களின் அச்சம் பற்றிய கருத்து உலாவுகிறது.

எங்களை நாங்களே காத்து அறிவுடன் செயற்பட வேண்டும். ஆடம்பரங்களை தவிருங்கள், பெண்கள் அதிக ஆபரணங் களை அணிந்து கொள்வதைத் தவிர்த்து உதவுங்கள். எங்கள் பிள்ளைகள் அகம் நிறைந்த ஆனந்தத்தை பெறும் ஆன்மீக விழாக் காலத்தை தடுக்காதீர்கள். நல்லூர் திருவிழாக் காலம் நாம் நலமாக வாழக் கிடைக்கும் நல்லதோர் தவக்காலம். – என்றுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு பரவல் அதிகரித்தது



மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்து வருகின்றது.

கடந்த ஜுலை 18ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 12 பேர் டெங்குநோய் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர். இவ்வாண்டில் மொத்தமாக 901 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் எமது மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றமை தரவுகள் மூலம் கணிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயின் தாக்கத்தை உணர்ந்து பொதுமக்கள் மிகவும் விழிப்புணர்வுடன் செயற்படுவதுடன், வீடுகளில் நீர் தேங்கியிருக்கும் இடங்களை அகற்றி, டெங்கு நுளம்புகள் பெருகுவதைத் தடுத்து, எமது சுற்றுப்புறச் சூழலை சுகாதார முறையில் பேணுவது கடமையாகும்.

பெறுமதியான மனித உயிரைப் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றாய் செயற்பட்டு, எமது நாட்டில் இருந்து டெங்கினை ஒழிப்பதற்கு ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணவேண்டியது காலத்தின் கட்டாயமாகும் – என்று அவர் அறிக்கையிட்டுள்ளார்.

# கட்டுத்துவக்கு வெடித்ததில் சீனக்குடாவில் ஒருவர் சாவு!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை– சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பல்துறை பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் இன்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான எம்.நஸார் (60வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்து கட்டுத்துவக்குடன் சென்ற போது தான் கொண்டு சென்ற துவக்குத் தானாகவே வெடித்ததில் காலில் காயம் ஏற்பட்ட நிலையில் இரத்தம் அதிக அளவில் சென்று இவர் உயிரிழந்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலம் சம்பவ இடத்தில் இருப்பதாகவும், மரணம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், விசாரணை முடிவுற்ற பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் சீனக்குடா பொலிஸார் இன்று காலையில் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ஆப்கானிஸ்தானில் பதுங்கி இருந்த

# அல்-கொய்தா தலைவர் ஏவுகணை வீசி கொலை ட்ரோன் மூலம் அமெரிக்கா வெற்றிகரத் தாக்குதல்






அமெரிக்காவில் 3 ஆயிரம் பேர் இறப்பதற்கு காரணமான இரட்டைக் கோபுரத் தாக்குதலின் மூளையாக செயல்பட்ட அல்-கொய்தா தலைவர் ஜவாகிரி, ஆப்கானில் பதுங்கி இருந்தபோது ட்ரோன் தாக்குதல் நடத்தி அமெரிக்கா கொன்றது.அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் இருந்த இரட்டை கோபுரத்தின் மீது விமானங்களை மோதி தகர்த்து, 3 ஆயிரம் அப்பாவி மக்கள் பலியாவதற்கு காரணமான தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர் அய்மன் அல்-ஜவாகிரி. அல்-கொய்தா அமைப்பின் 2ம் கட்ட தலைவராக அப்போது இருந்தார். 2011ம் ஆண்டு பாகிஸ்தானில் பதுங்கியிருந்த அல்-கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனை அமெரிக்க ராணுவம் கொன்ற பிறகு, இந்த அமைப்புக்கு ஜவாகிரி தலைமை ஏற்றார். இவருடைய தலைக்கு அமெரிக்கா ரூ.200 கோடி பரிசு அறிவித்து இருந்தது. இந்நிலையில், ஆப்கான் தலைநகர் காபூலில் உள்ள ஒரு வீட்டில் தனது குடும்பத்துடன் ஜவாஹிரி தங்கி இருக்கிறார் என அமெரிக்க உளவுத்துறைக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அவரை கொல்வதற்கு அமெரிக்க அதிபர் பைடன் கடந்த வாரம் ஒப்புதல் அளித்தார். அந்த வீட்டை உளவு ட்ரோன்கள் மூலம் கண்காணித்த அமெரிக்க ராணுவம், கடந்த மாதம் 31ம் திகதி பால்கனியில் ஜவாஹிரி நிற்பதை கண்டது. உடனடியாக, ட்ரோன் மூலமாக 2 ஏவுகணைகளை துல்லியமாக அவர் மீது வீசி தாக்கியது. இதில் அவர் கொல்லப்பட்டார். இதை உறுதிப்படுத்தவே, இத்தனை நாளாக இதை அமெரிக்கா அறிவிக்காமல் இருந்துள்ளது. இதன் மூலம், இரட்டைக்கோபுரத்தாக்குதலுக்கு 21ஆண்டுகளுக்கு பின் அமெரிக்கா பழித் தீர்த்துள்ளது.

## ரூ.7 கோடிக்கு வீட்டை விற்றார் நடிகை அம்பர்



பணத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால் ஜானி டெப்பின் முன்னாள் மனைவியும் நடிகையுமான அம்பர் ஹியர்ட், தனது வீட்டை ரூ.7 கோடிக்கு விற்றுள்ளார். பொலிவுட் நடிகர் ஜானி டெப்பை திருமணம் செய்த பிறகு, கருத்து வேறுபாட்டால் நடிகை அம்பர் ஹியர்ட் அவரை பிரிந்தார். ஜானி டெப் தன்னை சித்திர வதை செய்கிறார் எனவும் பாலியல் தொல்லை தருகிறார் எனவும் அவர் மீது புகார் கூறினார் அம்பர். இந்நிலையில் அம்பர் மீது ஜானி டெப் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் ஜானி டெப்புக்கு சாதகமான தீர்ப்பு வந்தது. அத்துடன் பொய் புகார் அளித்ததால் ரூ.116 கோடியை ஜானிக்கு அம்பர் கொடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பு கூறப்பட்டது. இந்நிலையில் பொருளாதார நெருக்கடியில் இருக்கிறேன் எனவும் தன்னிடம் பணம் இல்லை என்றும் அம்பர் கூறியிருந்தார். தனக்கு பணம் தேவையில்லை. தான் குற்றமற்றவன் என நிரூபிக்கப்பட்டதே போதும் என ஜானி டெப் கூறினார். இந்நிலையில் கலிபோர்னியாவிலுள்ள தனது வீட்டை ரூ.7 கோடியே 86 லட்சத்துக்கு அம்பர் விற்றுள்ளார். இதில் ரூ.40 லட்சம் அவருக்கு லாபம் கிடைத்திருப்பதாக கூறப்படுகிறது.வசித்து வந்த வீட்டையே விற்கும் அளவுக்கு அம்பர் பணக் கஷ்டத்தில் இருக்கிறார். அவருக்கு பட வாய்ப்புகளும் இல்லை என அவரது வக்கீல் கூறியிருக்கிறார்.




## போர் விமானங்களின் மிரட்டலையும் மீறி தாய்வான் சென்றார் நான்சி பெலோசி

### ரேடார் தொடர்புகளை துண்டித்தது அமெரிக்கா

சீனாவின் கடும் அச்சுறுத்தலுக்கு இடையே அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி,தாய்வானில் கால் பதித்தார். அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி, தனது ஆசிய பயணத்தை கடந்த 30ம் திகதி உறுதி செய்தார். அதன்படி, அவர் தனது குழுவினருடன் நேற்று அதிகாலை சிங்கப்பூர் சென்றார். அங்கிருந்து மலேசியா சென்றார். தொடர்ந்து, தாய்வான் நோக்கி அமெரிக்க ராணுவ விமானத்தில் தனது பயணத்தை தொடர்ந்தார். 'பெலோசி தாய்வான் சென்றால், சீன ராணுவம் வேடிக்கை பார்த்து கொண்டு இருக்காது. கடுமையான பின்விளைவை சந்திக்க வேண்டியிருக்கும், என்று சீனா எச்சரித்தது. இதனால், பெலோசியின் தாய்வான் பயணம் பரபரப்பும், பதற்றமும் நிறைந்ததாக இருந்தது.

பெலோசி தாய்வானை நோக்கி விமானத்தில் சென்ற அதே நேரம், சீனாவின் போர் விமானங்கள் மற்றும் போர்க் கப்பல்கள் தாய்வான் எல்லையில் சுற்றி வந்து அச்சுறுத்தின. மேலும், ராணுவ கவச வாகனங்கள் தாய்வான் எல்லை நோக்கி நகர்ந்தன. இதனால், பெலோசி பலத்த பாதுகாப்புடன் அழைத்து செல்லப்பட்டார். சீனா தாக்குதல் நடத்தினால் பதிலடி கொடுப்பதற்கு அமெரிக்க ராணுவம் தயார் நிலையில் இருந்தது.

இதனால், உலகளவில் பெரும் பதற்றம் நிலவியது. இந்நிலையில், நேற்றிரவு தாய்வானின் தலைநகரமான தைபேயில் பெலோசியின் விமானம் தரையிறங்கியது. இதன் மூலம், 25 ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்க அரசின் முக்கிய பொறுப்பில் உள்ள ஒருவர் தாய்வானில் கால்பதித்தவரலாற்றைபெலோசிபடைத்துள்ளார். பெலோசியின் விமானம் தாய்வானை நோக்கி பறந்து கொண்டிருந்த நேரத்தில், அந்த விமானத்தை யாரும் கண்டுபிடிக்க முடியாத வகையில், மொத்த ரேடார் இணைப்புகளையும் அமெரிக்க தொழில்நுட்ப பிரிவினர் துண்டித்தனர். இதனால் சீன போர் விமானங்கள் திகைத்து விட்டன. பெலோசியும் சவால் விட்டபடி தாய்வான் சென்றடைந்தார்.

## இங்கிலாந்தில் விநாயகர் உருவம் பொறித்த தங்கக்கட்டி ஒன்லைனில் விற்பனை



*விநாயகர் சதுர்த்தி இம்மாதம் 31ம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இதையொட்டி, இங்கிலாந்தில் உள்ள ராயல் தங்கசாலை, விநாயகர் உருவம் பொறித்த 24 கரட் சுத்த தங்கத்தில் தங்க கட்டியை வெளியிட்டுள்ளது.*

*விநாயகர் காலடியில் தட்டு நிறைய லட்டுகள் இருப்பதுபோல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் எடை 20 கிராம். விலை 1,110.80 பவுண்டு (ரூ.1 லட்சத்து 8 ஆயிரம்) என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த தங்கக் கட்டி, ராயல் தங்க சாலையின் இணையதளத்தில் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த நவம்பர் மாதம் தீபாவளியை முன்னிட்டு, லட்சுமி உருவம் பொறித்த தங்கக்கட்டியை ராயல் தங்கசாலை வெளியிட்டு இருந்தது.மேற்கண்ட 2 கடவுள்களின் உருவங்களும் வேல்ஸ் பகுதியில் உள்ள சுவாமி நாராயணன் கோவிலை சேர்ந்த நிலேஷ் கபாரியா ஆலோசனையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.*

## அல் கொய்தா தலைவர் கொலை; ஜோ பைடனுக்கு ஒபாமா பாராட்டு

அல்-கொய்தா இயக்க தலைவன் ஒசாமா பின்லேடனோடு நெருங்கிய தொடர்புடையவர் அய்மான் அல்-ஜவாரி. அவரை அதிமுக்கிய பயங்கரவாதிகள் பட்டியலில் இணைத்திருந்த அமெரிக்க அரசு, கடந்த 2011ம் ஆண்டிலிருந்து தேடி வந்தது. இதற்கிடையே, ஆப்கானிஸ்தானில் சி.ஐ.ஏ. ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் அல்-கொய்தா பயங்கரவாத இயக்க தலைவர் அய்மான் அல்-ஜவாரி கொல்லப்பட்டார் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நேற்று அறிவித்தார்.

இந்நிலையில், அய்மான் அல்-ஜவாஹிரி கொல்லப்பட்டதற்கு அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா வரவேற்றுள்ளார். இதுதொடர்பாக ஒபாமா வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், செப்டெம்பர் 11 தாக்குதலுக்கு 20 ஆண்டுகளுக்கு பிறகு, அந்த பயங்கரவாத தாக்குதலின் மூளையாக செயல்பட்டவர்களில் ஒருவரும், அல்-கொய்தாவின் தலைவருமான அய்மான் அல்-ஜவாரி இறுதியாக நீதியின் முன் நிறுத்தப்பட்டுள்ளார். அதிபர் பைடனின் தலைமைக்கு பாராட்டுக்கள். இந்த தருணத்திற்காக பல பத்தாண்டுகளாக உழைத்த உளவுத்துறை அதிகாரிகள் தங்களில் ஒருவருக்கு கூட சிறிய பாதிப்பும் இன்றி இதை நிகழ்த்திக் காட்டியுள்ளனர் என பதிவிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியா வேலையில்லா திண்டாட்டத்துடன் போராடுவதாக ராகுல்காந்தி குற்றச்சாட்டு



இந்தியா, வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சந்தித்து கொண்டிருக்கும்போது பல குடும்பங்கள் நிலையான வருமானத்திற்கு வழியில்லாமல் இருக்கின்றன. இந்த நிலையில் திமிர் பிடித்த ராஜா என்ற விம்பத்தை மெருகூட்டுவதற்காகவே அரசாங்கம் கோடிக்கணக்கில் செலவு செய்கிறது, என ராகுல்காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார். மக்களவையில் விலைவாசி உயர்வு மீதான விவாதத்திற்குப் பிறகு முகநூல் பதிவில் ராகுல்காந்தி இந்தக் கருத்தினைப் பதிவிட்டுள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடரில் மக்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்க காங்கிரஸ் முயற்சித்ததாகவும், இருப்பினும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டனர் எனவும், மக்களுக்கான போராட்டத்திற்காக அவர்கள் கைது செய்யப்பட்டனர், என்றும் அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார். அவை ஒத்திவைக்கப்பட்டதை அனைவரும் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களவையில் விலைவாசி தொடர்பாக விவாதம் நடந்தபோது, பணவீக்கம் என்ற பிரச்சினை எதுவும் இல்லை, என்று அரசாங்கம் கூறியிருக்கிறது. நாடு வேலையில்லா திண்டாட்டத்தை சந்தித்து கொண்டிருக்கும் போது பல குடும்பங்கள் நிலையான வருமானத்திற்கு வழியில்லாமல் இருக்கின்றன. இந்த நிலையில் திமிர் பிடித்த ராஜா என்ற விம்பத்தை மெருகூட்டுவதற்காகவே அரசாங்கம் கோடிக்கணக்கில் செலவு செய்கிறது. நீங்கள் தனியாகப் போராட வேண்டியதில்லை. உங்களின் குரல் தான் காங்கிரஸ். நீங்கள்தான் காங்கிரஸின் வலிமை. மக்களின் குரலை நசுக்கும் சர்வாதிகாரத்தை எதிர்த்து காங்கிரஸ் போராடும். உங்களுக்காக, நானும், காங்கிரஸ் கட்சியும் போராடி வருகிறோம், தொடர்ந்து போராடுவோம், என்றும் ராகுல் தெரிவித்திருக்கிறார்.

இன்று நாட்டில் எந்தெந்தப் பிரச்சினைகள் விவாதிக்கப்பட வேண்டும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனெனில், அரசின் ஒவ்வொரு தவறான கொள்கையும் உங்கள் வாழ்க்கையைப் பாதிக்கிறது. தான் சொல்வதையெல்லாம் நீங்கள் கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது, நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன், அவர்களுக்குப் பயந்து சர்வாதிகாரத்தை அனுபவிக்கத் தேவையில்லை, அவர்கள் கோழைகள். உங்கள் வலிமைக்கும் ஒற்றுமைக்கும் பயப்படுகிறார்கள். அதனால்தான் அவர்கள் தொடர்ந்து தாக்குகிறார்கள். நீங்கள் அவர்களை ஒற்றுமையாக எதிர்கொண்டால் அவர்கள் பயப்படுவார்கள், எனவும் அவர் தனது முகநூல் பதிவில் கூறியிருக்கிறார்.



# டெல்லியில் மேலும் ஒருவருக்கு குரங்கு அம்மை பாதிப்பு உறுதி

இந்தியாவில் கடந்த 14 ஆம் திகதி குரங்கு அம்மை பாதிப்பு முதன்முதலாக உறுதி செய்யப்பட்டது. ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து கேரள மாநிலம் வயநாட்டுக்கு வந்த ஒருவருக்கு குரங்கு அம்மை பாதிப்பு கண்டறியப்பட்டமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

குரங்கு அம்மை பாதித்த 35 வயதான நபர் திருவனந்தபுரம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று, தொற்றில் இருந்து குணமடைந்தார். இவரைத் தவிர கேரளாவில் மேலும் நான்கு பேருக்கு குரங்கு அம்மை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் இந்தியத் தலைநகர் டெல்லியில் இருவருக்கு குரங்கு அம்மை பாதிப்பு உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று டெல்லியில் வசிக்கும் நைஜீரிய நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கும் குரங்கு அம்மை தொற்றியிருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்தியாவில் குரங்கு அம்மைத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை எட்டாக உயர்ந்துள்ளது.

# எடப்பாடி மீதான டெண்டர் முறைகேடு வழக்கு சி.பி.ஐ. விசாரணையை இன்று ரத்து செய்தது

## உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு

எடப்பாடி பழனிசாமி மீதான டெண்டர் முறைகேடு வழக்கில் சி.பி.ஐ. விசாரணையை ரத்து செய்து இன்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழக முதல்வராக எடப்பாடி பழனிசாமி இருந்தபோது தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி நெடுஞ்சாலைத் துறையின் ஒப்பந்த பணிகளை உறவினர்களுக்கு சட்டவிரோதமாக வழங்கியுள்ளதால், விசாரணை நேர்மையாக நடைபெற, வழக்கை சி.பி.ஐக்கு மாற்ற வேண்டும் என தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

4,800 கோடி ரூபா அளவிற்கு நெடுஞ்சாலை துறை டெண்டரில் முறைகேடு நடந்ததாக எடப்பாடிக்கு எதிராக ஆர்.எஸ் பாரதி புகார் அளித்தார். சென்னை உயர் நீதிமன்றம் இதில் சி.பி.ஐ. விசாரணைக்கு அனுமதி அளித்தது.

இதை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில் உச்ச நீதிமன்றம் சி.பி.ஐ. விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்தது.

இந்நிலையில் எடப்பாடி பழனிசாமி மீதான டெண்டர் முறைகேடு வழக்கு கடந்த மாதம் 26ம் திகதி உச்ச நீதிமன்றத்தில் தலைமைநீதிபதி அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, இந்த வழக்கு விவகாரத்தில் அனைத்து தரப்பினரும் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், வழக்கை ஒகஸ்ட் 3ம் திகதிக்கு (இன்று) ஒத்திவைக்கிறோம் எனவும் உத்தரவிட்டார்.

இந்த வழக்கில், தி.மு.கவின் ஆர்.எஸ். பாரதி தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் புதிய பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், எடப்பாடி பழனிசாமி மீதான டெண்டர் முறைகேடு வழக்கில் சி.பி.ஐ. விசாரணையை ரத்து செய்து உத்தரவிடுகிறோம்.

லஞ்ச ஒழிப்புத்துறை பதிவு செய்த டெண்டர் முறைகேடு வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

டெண்டர் முறைகேடு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மீண்டும் விசாரிக்க உத்தரவிடுகிறது. லஞ்ச ஒழிப்புத்துறை அளித்த அறிக்கை அடிப்படையில் உயர்நீதிமன்றம் இவ் வழக்கை விசாரிக்க வேண்டும். இவ் வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் ஏற்கனவே தெரிவித்த கருத்துக்களை கருத்தில் கொள்ளாமல் புதிதாக மீண்டும் விசாரிக்க வேண்டும், இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

# 183 சிறுவர்கள் கடத்தல்காரர்களிடமிருந்து ரயில்வே பாதுகாப்புப் படையினரால் மீட்பு

கடந்த 2017 முதல் 2021 வரையிலான 5 ஆண்டுகளில் கடத்தல்காரர்களிடம் இருந்து 2,178 பேரை ரயில்வே பாதுகாப்பு படை மீட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. குழந்தைகள், மகளிர் மற்றும் ஆடவர் என பாதுகாப்பும், கவனமும் தேவைப்பட்ட 65 ஆயிரத்திற்கும் கூடுதலானோருக்கு உதவிகளையும் செய்து அவர்களை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூலையில் சிறப்பு ஒரு மாத கால மனித கடத்தல் தடுப்பு நடவடிக்கையை ரயில்வே பாதுகாப்பு படை மேற்கொண்டது. இதற்காக அந்தந்த மாநில பொலிஸாருடன் இணைந்து பணிபுரியும்படி படையினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. கடத்தல் வழக்குகள் பற்றிய தகவல்கள் கிடைத்தவுடன் செயலாற்றுவது, கடத்தல்களைக் கண்டறிவது ஆகிய பணிகளை ரயில்வே பாதுகாப்பு படையினர் மேற்கொண்டனர். இதன் காரணமாக 183 சிறுவர்கள் மற்றும் 3 பெண்களை கடத்தல்காரர்களிடம் இருந்து மீட்டுள்ளதாகவும், இதனுடன் தொடர்புடைய கடத்தல்காரர்கள் 47 பேரை கைது செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடத்தல்களுக்குப் பின்னணியில், பெண்கள் மற்றும் குழந்தைகளை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குதல், விபச்சாரம், கொத்தடிமைத் தொழில்களுக்குள் தள்ளுவது, கட்டாயத் திருமணம், வலுக்கட்டாயமாக அடிமைகளாக வீட்டு வேலையில் ஈடுபடுத்துதல், சட்டவிரோதமாக பணம்பெற்று தத்துக் கொடுத்தல், பிச்சை எடுத்தல், உறுப்பு மாற்று சிகிச்சை மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றுக்கு அவர்களைப் பயன்படுத்தி கொள்ளும் பாரிய வலையமைப்புகள் செயற்படுகின்றன என ரயில்வே பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# திணைக்களத் தலைவர்கள் சிலருக்கு கிழக்கு மாகாணத்துக்குள் இடமாற்றம்





(நூருள் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் பணிப்புரைக்கு அமைய மாகாணத்தில் நீண்டகாலமாக ஒரே பதவியில் கடமையாற்றிய சில திணைக்களத் தலைவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். நீண்டகாலமாக ஒரே நிறுவனத்தில் பணிபுரிந்ததாலும், அந்த பதவிகள் தொடர்பான தகுதிகளை பூர்த்தி செய்யாததாலும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, மாகாண பிரதம செயலாளர் துசித பீ. வணிக சிங்கவுக்கு ஆளுநர் வழங்கிய அறிவுரைப்படி இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய, மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளராகக் கடமையாற்றிய திருமதி.ஆர்.வளர்மதி மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய என். சிவலிங்கம் மாகாண கூட்டுறவு திணைக்கள ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண கூட்டுறவு ஆணையாளராக கடமையாற்றிய ஏ.எல்.எம். அஸ்மி கல்முனை மாநகர ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண கலாசார பணிப்பாளராக கடமையாற்றிய எஸ்.நவநீதன் மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் காப்புறுதி சேவைகள் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளராக பணியாற்றிய திருமதி.எஸ்.சரணியா மாகாண கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, மாகாண கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகப் பணியாற்றியஏ.ஜி. தேவேந்திரன்மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராக கடமையாற்றிய கே.இளந்துடுதன் மாகாண கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மாகாண பிரதம செயலாளர் துசித பீ.வணிகசிங்க தலைமையில் வழங்கப்பட்டன.

புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் நேற்றுக் காலை திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

## கல்முனை மாநகர சபையின் ஆணையருக்குப் பிடியாணை




(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர ஆணையாளர் எம்.சீ. அன்சாருக்கு எதிராக கல்முனை நீதிவான் நீதிமன்றினால் நேற்று செவ்வாய்க்கிழமை பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட கல்முனை மற்றும் சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களில் தூர்நாற்றம் வீசுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் கல்முனை மாநகர சுகாதாரக் குழுவின் தவிசாளரான மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி றோன் அக்தாரினால் கல்முனை நீதிவான் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் கல்முனை மாநகர ஆணையாளர் உள்ளிட்ட எட்டு பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை கல்முனை நீதிவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரதிவாதியான கல்முனை மாநகர ஆணையாளர் எம்.சீ.அன்சார் மன்றில் ஆஜராகவில்லை. இதனால், அவருக்கு எதிராக கல்முனை நீதிவானினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து, வழக்கு செப்டெம்பர் 13ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## நிந்தவூர் கரையோரம் மோசமான கடலரிப்பு



நிந்தவூர் பிரதேசத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள உக்கிர கடலரிப்புக் காரணமாக கடற்கரையை அண்டி வாழும் பொது மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடலை அண்டிய பகுதிகள் கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டுள்ளமையோடு, தென்னை மரங்களும்மீனவர்களின்மீன்பிடி வாடிகளும், கடல் நீரால் காவு கொள்ளப்படுகின்றன.

இதனால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதோடு, மீனவர்களின் இயந்திரப்படகுகள், தோணிகளை கடற்கரை ஓரம் நிறுத்த முடியாது, மேட்டுப் பகுதிகளுக்கு நகர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்கரையை அண்டியுள்ள பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொதுக் கட்டடங்கள், மீனவர் தங்குமிடம் போன்றவையும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடலரிப்பைத் தடுப்பதற்கு கடலோரம் பேணல் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் என்பன இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே, நிந்தவூர் பிரதேசம் எதிர்நோக்கியுள்ள இக் கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் தாமதமின்றி காதத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## காட்டுப் பாதையில் கட்டகாமத்தில் இராணுவத்தினரின் அன்னதானம்







( காரைதீவு நிருபர் சகா)

கதிர்காமகாட்டுப் பாதையில் இறுதி கட்ட நுழைவாயில் இருக்கின்ற கட்டகாமத்தில் இலங்கை இராணுவத்தினர் பாத யாத்திரிகர்களுக்கு தொடர்ச்சியாக அன்னதானம் வழங்கி வருகின்றார்கள். ஆயிரக்கணக்கான பாதயாத்திரிகர்கள் பசியாறி வருகின்றார்கள். இராணுவ வீரர்களே சுகாதார முறைப்படி உணவு விநியோக சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அடியார்கள் நீண்ட வரிசையில் நின்று அன்னதானத்தில் பங்கேற்று வருகின்றார்கள்.

# கட்சி உறுப்பினர்களை அமைச்சுப் பதவிகள் ஊடாக இணைப்பதை சர்வகட்சி அரசு என கருதமுடியாது



## விமல் எச்சரிக்கை

அரசியல்,சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில் சர்வகட்சி மாநாட்டை விரைவாக நடத்த வேண்டும். அரசமைப்பு திருத்த விவகாரத்தில் அரசியல் கட்சிகள் முன்வைத்த யோசனைகள் உள்வாங்கப்படவில்லை.

அரசமைப்பு உருவாக்கம் விவகாரத்தில் அனைத்து கட்சிகளின் இணக்கப்பாட்டையும் பெற்றுக்கொள்ள அவதானம் செலுத்த வேண்டும் என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடியை சாதகமாகக் கொண்டு இலங்கை தேசியத்தை வீழ்த்த பிற தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமையை ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்டு வருகிறோம்.

உங்களின் பழைய ஆலோசகர்களின் ஒன்றிணைப்புடன் சர்வகட்சி அரசாங்கத்துக்கான கொள்கையை வகுத்தால் அதனை அரசியல் கட்சிகளும், மக்களும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் பிரதமராக நியமிக்கப்பட்ட காலத்திலிருந்து ஜனாதிபதியாக பதவியேற்கும் வரை சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு எவ்வித முறையான செயற்திட்டங்களையும் பகிரங்கப்படுத்தவில்லை.

சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு சர்வகட்சி மாநாட்டை நடத்துமாறு மீண்டும் வலியுறுத்துகிறோம்.

சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு முன்னர் சர்வகட்சி மாநாட்டின் ஊடாக சர்வகட்சி அரசாங்கத்தின் கொள்கைகளைப் பகிரங்கப்படுத்துவதில் தவறொன்றுமில்லை.

தன்னிச்சையான முறையில் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ படிப்பினையை கற்றுக்கொண்டமை முக்கியமானதாகக் கருதப்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் அரசமைப்பு திருத்தம் ஊடாக அரசியல் கட்டமைப்பு முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

அரசமைப்பு திருத்தம் தொடர்பில் நாங்கள் முன்வைத்த யோசனைகள் தற்போது வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிட்டுள்ள திருத்த வரைவில் உள்வாங்கப்படவில்லை. அரசமைப்பு திருத்த விடயத்தில் அரசியல் கட்சிகளின் யோசனைகளை முதலில் இணக்கப்பாட்டுடன் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதற்கமைய சர்வகட்சி மாநாட்டை நடத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் கொள்கை திட்டத்தை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும். சர்வகட்சி அரசாங்கத்தில் முறையான மாற்றத்தை ஏற்படுத்தாமல் கட்சி உறுப்பினர்களை மாத்திரம் அமைச்சுப் பதவிகள் ஊடாக இணைத்துக்கொள்வதை சர்வகட்சி அரசாங்கம் எனக் கருத முடியாது என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். – என்றார்.

# சிறுபான்மை மக்களை இலக்குவைத்த அரசியல்வாதிகளே இலங்கையின் இன்றைய அவல நிலைமைக்குக் காரணம்

## இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் கருத்து

அரசியல்வாதிகள் வேலைவாய்ப்பைத் தங்களால் உருவாக்க முடியாதபோது அதனை மறைப்பதற்காக சிறுபான்மையினத்தவர்களைத் தாக்குவதால் ஏற்படக்கூடிய விளைவுகளை இலங்கை அனுபவிக்கின்றது என இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் தெரிவித்துள்ளார்.

லிபரல் ஜனநாயகத்தையும் அதன் கட்டமைப்புகளையும் வலுப்படுத்துவதிலேயே இந்தியாவின் எதிர்காலம் தங்கியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். பொருளாதார வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியமான விடயம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மை வாதம் தொடர்பாக எச்சரித்துள்ள அவர், வேலைவாய்ப்பு நெருக்கடியிலிருந்து கவனத்தைத் திசைதிருப்புவதற்காக அரசியல்வாதிகள் சிறுபான்மையினத்தவர்களைத் தாக்குவதால் என்ன நடக்கும் என்பதற்கு இலங்கை உதாரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

பாரிய சிறுபான்மையினத்தவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக மாற்றும் முயற்சிகள் நாட்டை பிளவுபடுத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் லிபரல் ஜனநாயகத்தை நிச்சயம் வலுப்படுத்தவேண்டும், ஜனநாயகம் ஒரு பலவீனம் அல்லது பின்னடைவு என்ற எண்ணம் இந்தியாவில் சில தரப்பினரிடம் காணப்படுகின்றது, இந்தியா வளர்ச்சியடைவதற்கு வலுவான எதேச்சதிகார தலைமைத்துவம் சில கட்டுப்பாடுகளுடன் அவசியம் என்ற எண்ணம் காணப்படுகின்றது. நாங்கள் அந்த திசையை நோக்கி பயணிக்கின்றோம் போல தோன்றுகின்றது என ரகுராம் ராஜன் தெரிவித்துள்ளார்.



இந்தக் கருத்து தவறானது என நான் கருதுகின்றேன். இது பொருள்களுக்கும் மூலதனத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கும் மக்களுக்கும் சிந்தனைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்காத காலத்தால் வலுவிழந்த மாதிரி என அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சி என்ற விடயத்தில் இந்தியாவின் குறைவான செயல்திறன் நாங்கள் பயணிக்கும் பாதை மீளசிந்திக்கவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

லிபரல் ஜனநாயகத்தையும் அதன் கட்டமைப்புகளையும் வலுப்படுத்துவதிலேயே எங்கள் எதிர்காலம் தங்கியுள்ளது. பலவீனப்படுத்துவதில் இல்லை. அதனை வலுப்படுத்துவதே எங்கள் வளர்ச்சிக்கு அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை ஏதேச்சதிகாரத்தை ஏன் தோற்கடிக்கவேண்டும் என்பதை தெளிவுபடுத்தியுள்ள இந்தியாவின் ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பாரிய சிறுபான்மையின சமூகத்தை இரண்டாம் தரப் பிரஜைகளாக மாற்றுவதற்கான முயற்சிகள் நாட்டைப் பிளவுபடுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுக்கு நட்சத்திர ஹோட்டலில் இருந்து உணவுகள்

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்று, காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுக்கு ஆரம்பம் முதலே உணவு வழங்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஹோட்டலில் இருந்து நாளொன்றுக்கு 500 முதல் 600 வரையான உணவுப் பொட்டலங்களை போராட்டக்காரர்கள் பெற்றுள்ளனர் எனத் தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போராட்டம் ஆரம்பித்ததில் இருந்து அண்மைக்காலம் வரை உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டு வந்தன என கூறப்படுகிறது. இந்த உணவுப் பொட்டலங்கள் இலவசமாக வழங்கப்பட்டனவா? அல்லது ஏதேனும் அமைப்பால் முன்பதிவுசெய்யப்பட்டுவழங்கப்பட்டனவா? என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட போராட்டக்காரர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இது தெரியவந்துள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஆடைத்தொழிலுக்கு சலுகைகள் வழங்கல்

ஆடைத்தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள், பொருள்களை இறக்குமதி செய்வதற்கு வரிச் சலுகைகளை வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படாத பொருள்களை இறக்குமதி செய்வதற்கு வரிச் சலுகையை வழங்கும் வகையில் அமைச்சர் அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார்.

கச்சாப் பொருள்களின் விலையேற்றம் மற்றும் நாட்டில் நிலவும் பாதகமான பொருளாதாரச் சூழல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஆடைத் தொழில்துறைக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

# மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் மஸ்கெலியாவில் ஒருவர் சாவு



மஸ்கெலியா – நோர்ட்டன் பிரிட்ஜ் டெப்லோ பகுதியில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப்பொலிஸார்தெரிவித்தனர்.

மேற்படி பகுதியில் பெய்த பலத்த மழையின் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

# நாட்டில் வறிய மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சி புத்தகங்கள்

வறிய மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சிப் புத்தகங்களை வழங்குவது தொடர்பாகக் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அதற்கான பணத்தை ஒதுக்குவதற்கு மத்திய வங்கி நடவடிக்கை எடுத்து வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்காக இந்தியாவில் இருந்து மை மற்றும் காகிதத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்ப தரங்களுக்கு மதிய உணவு வழங்குவது தொடர்பாகவும் கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.08.20 22இல் வெளியிடப்பெற்றது.